

நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016, தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான நடைபெற்ற மூன்றாம்கட்ட பயிற்சியினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப அவர்கள், நகர்கோவில் சட்டமன்ற தொகுதி, தென்னிந்திய இந்து கல்லூரியில் இன்று (15.05.2016) பார்வையிட்டார். தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.ச.மதியழகன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு. எ.வி. மூர்த்தி ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 284/2016 நாள்: 15.05.2016

**பயிற்சியினை நல்லமுறையில் பயன்படுத்தி கொண்டு, வாக்குப்பதிவு நாளன்று தாங்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும்.**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு வேண்டுகோள்.**

நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ல், ஆறு சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கான மூன்றாம் கட்ட பயிற்சி இன்று (15.05.2016) நடைபெற்றது.

தேர்தல் விதி முறைகளை கடைபிடிப்பது தொடர்பாக தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள வாக்குச் சாவடி அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்களுக்கு மூன்றாம் கட்ட பயிற்சி இன்று நடைபெறுகிறது. நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு நாகர்கோவில் தென்னிந்திய இந்துக்கல்லூரியிலும், கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்கு நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியிலும், குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கு மணவாளகுறிச்சி பாபுஜி நினைவு மேல்நிலைப்பள்ளியிலும், பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதிக்கு தக்கலை அமலா கான்வென்ட் மேல்நிலைப்பள்ளியிலும், விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கு மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியிலும், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்கு கருங்கல் பெத்லகேம் பொறியியல் கல்லூரியிலும் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில் தென்னிந்திய இந்து கல்லூரியிலும், ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியிலும் நடைபெற்ற மூன்றாம் கட்ட பயிற்சி வகுப்பினை பார்வையிட்டு தெரிவித்ததாவது:-

எதிர்வரும் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ல், வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று நமது மாவட்டத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் சுமார் 8 ஆயிரத்து 674 ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு மூன்றாம் கட்ட பயிற்சி ஆறு சட்டமன்ற தொகுதிகளில் இன்று நடைபெற்றது. பயிற்சியில் வாக்குப்பதிவு நாளில் தேர்தல் விதிமுறைகளை பின்பற்றி எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதை குறித்தும், ஒவ்வொரு அலுவலர்களும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், மழை பெய்து கொண்டிருப்பதால் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை (பாலிதீன் கவர்) பாதுகாப்பான முறையில் கொண்டு செல்ல வேண்டும். வாக்குச்சாவடிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் மழை நீர் படாதவாறு வைக்க வேண்டும். பயிற்சியில் கலந்து கொள்ளும் அலுவலர்கள் இதனை நல்லமுறையில் பயன்படுத்தி கொண்டு, வாக்குப்பதிவு நாளில் தாங்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பயிற்சியில் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு. ச.மதியழகன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு. எ.வி.மூர்த்தி, கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு. சின்னம்மாள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு. கோலப்பன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.